## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை – 2016

---

லங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் அதிகாரச்சட்டத்தின் 76(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென தான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 242,773 ஆன கடன்பட்டோர் மீதிகளுக்குரிய உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெற வேண்டிய கணக்குகள்

2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, அணுசக்தி அதிகாரசபையிலிருந்து விலகும் போது கையளிக்கப்பட்ட ரூபா 228,773 ஆன கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்ய முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் கதிர்வீச்சு பாதுகாப்பு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஒருவருக்கு ரூபா 2,000 வீதம் ரூபா 70,780 தொகை மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக பேரவையின் நிதி விளைவுகள் ரூபா 973,993 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,479,000 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறையில் ரூபா 2,505,007 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. செலவினங்கள் ரூபா 15,529,745 ஆல் அதிகரித்த போதிலும், மொத்த வருமானம் வருமானம் ரூபா 18,034,753 ஆல் அதிகரித்திருந்தமையால் மேற்படி பற்றாக்குறை குறைவடைவதற்கு காரணங்களாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசகத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அணுக்கதிரியக்கத்திலிருந்து நிவாரணம் பெறுதல் மற்றும் சாத்தியமான ஆபத்துகளிலிருந்து நபர்களையும் சுற்றாடலையும் பாதுகாத்தல் மற்றும் தோற்றுவாய்கள் மற்றும் வசதிகள் பாதுகாப்பு என்பவற்றிற்குத் தகுதியானவாறு ஏற்பாடுகளைச் செய்தல், அதன் மூலம் நபர்களதும் சுற்றாடலினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இலங்கையினால் இணக்கம் தெரிவிக்கப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட அணுச்சக்தி துறைக்குரிய சர்வதேச நியமங்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு அனுசரணையாக இருப்பதாக உறுதி செய்தல் என்பன இந்த பேரவையின் நோக்கங்களாகும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது அந்நோக்கங்களில் 60 சதவீதத்தையே அடைந்து கொள்ள முடியுமாக இருந்தது.

(ஆ) இந்த அதிகாரச்சட்டத்தின் 87(1) ஆம் பிரிவின் மூலம் ஆணைக்குழுவிற்குத் தேவையான சட்டபூர்வ அதிகாரத்தைப் பெறுவதற்கான விதிகளைத் தயாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய 2016 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவினால் இரண்டு விதிகள் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் அதிகாரச்சட்டத்தின் 87(1) ஆம் பிரிவின் (அ) தொடக்கம் (ஏ) வரையிலான விடயங்கள் தொடர்பாக பேரவையினால் விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 41 ஆகவும் உள்ளபடியான எண்ணிக்கை 29 ஆகவும் இருந்தமையால் சிரேஷ்ட பதவிநிலைத் தரத்தில் ஒரு வெற்றிடமும், மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 09 வெற்றிடங்கள் என பேரவையின் வெற்றிடங்கள் 12 ஆக காணப்பட்டது. இரண்டாம் நிலையில் பதவிகள் வெற்றிடங்கள் காணப்பட்டமை உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றாக நிறுவனத்தின் தவறுகளைக் குறைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பரிசோதனை முறைமைகள் போதியளவில் செயற்படுத்துவதற்கு தடையொன்றாக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

13 செலவின விடயங்கள் தொடர்பாக பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையே 30 சதவீதம் முதல் 288 சதவீதம் வரையான வீச்சில் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | --------------------------------------- | ------------------------------------ |
| (அ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | பெறவேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | பேரவையின் நோக்கங்களை அடைவதற்கேற்றவாறு கடமைகள் மற்றும் அளவுகளின் பிரகாரம் மனித வளங்கள் முகாமைத்துவம் செய்யப்படாமை |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே விலகல் காணப்படல் |
| (ஈ) | கொடுப்பனவுக் கட்டுப்பாடு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நலன்கள் கொடுப்பனவு செய்யப்படுகின்றமை. |